Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 247

திங்கட்கிழமை 31 ஜூலை 2023

ஆடி 15 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாயில்

# அமைச்சரவைத் தீர்மானத்தையும் மீறி சிங்களவர்களுக்கு காணிகள் பகிர்வு

## மகாவலி அதிகாரசபை கைவிரிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 31

மகாவலி 'எல்' வலயத்தினுள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளைக் கையேற்கும் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும் அதனையும் மீறி கொக்குத்தொடுவாய் அக்கரைவெளியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமாகவிருந்த ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் சிங்களவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. »11



துப்புரவுப் பணியில் ஈடுபடும் சிங்களவர்கள்.



## ஓமந்தையில் விபத்து தலவாக்கலைவாசி சாவு!

வவுனியா, ஜூலை 31

ஓமந்தை இராணுவச்சோதனைச் சாவடிக்கு அருகாமையில் »11

## சட்டவிரோத திஸ்ஸ விகாரை; மீண்டும் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

தையிட்டியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்துச் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்ற வேண்டுமென வலியுறுத்தியும், தனியார் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கவேண்டுமென வலியுறுத்தியும் கடந்த மே மாதம் 3ஆம் திகதி முதல் எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. »11

## இது சிங்கள - பௌத்த நாடு எங்கும் புத்தர்சிலை வைப்போம்

### குருந்தூர்மலை விடயத்தில் வீரசேகர மீண்டும் சீண்டல்

கொழும்பு, ஜூலை 31

இலங்கை பௌத்த - சிங்கள நாடு. இங்கு எங்கும் புத்தர் சிலைகளை வைத்து வழிபடு »11

## தமிழீழமே நிரந்தரத் தீர்வு: பிரிட்டனில் எழுந்த கோஷம்

விரிவு:- பக்.11

## 13 ஆவது திருத்தம்; ரணிலுக்கு கழிவாளம்

### தேர்தலில் வென்ற பின்னர் பேசுங்கள் என்கின்றது பெரமுன உயர்பீடம்

கொழும்பு, ஜூலை 31

2024ஆம் ஆண்டு முதல் காலாண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிப் பெற்றதன் பின்னர் அரசமைப்பின் 13ஆவது »11

## உணவுப் பற்றாக்குறையை நாடு எதிர்கொள்ள நேரிடும்

### எச்சரிக்கிறார் விவசாய அமைச்சர்

கொழும்பு, ஜூலை 31

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை எதிர்காலத்தில் மேலும் கடுமையாகும். அடுத்த போகம் தோல்வியடையும் பட்சத்தில், நாடு உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்ள நேரிடும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர »11

## பொலிஸ் அத்தியட்சகருக்கு நேற்றுத் திடீர் இடமாற்றம்

வவுனியா, ஜூலை 31

வவுனியாவில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டிருந்த, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சீ.பி.விக்கிரமசிங்கவுக்கு திடீர் »11

# அரசாங்கத்தின் ஊதுகுழலான டக்ளஸ் எங்கள் போராட்டத்தை எப்படி ஆதரிப்பார்?

## ஹர்த்தாலன்று ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் தொடர்பில் கண்டனம்

கிளிநொச்சி, ஜூலை 31

கடந்த வெள்ளியன்று முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் நடக்கவில்லை. பாதிக்கப்பட்ட தரப்பாலேயே முன்னெடுக்கப்பட்டது. மனிதாபிமானமுள்ளவர் என்றால் அவர் ஆதரவளித்திருக்கவேண்டும். அரசாங்கத்தின் ஊதுகுழலான அவரிடம் அதை எதிர்பார்க்க முடியாது- இவ்வாறு பல தரப்பினரும் அமைச்சர் டக்ளஸின் செயற்பாட்டைக் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலியில் சட்டவிரோத மண் அகழ்வு ஊரவர்களால் டிப்பர் மடக்கிப் பிடிப்பு

## பொலிஸார் அசமந்தம் என்றும் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 31**

**சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அராலி மத்தியில் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் டிப்பர் வாகனம் ஒன்று கிராம அலுவலர் மற்றும் ஊர் இளைஞர்களால் நேற்று மடக்கிப் பிடிக்கப்பட்டது. மண் ஏற்றிச் சென்ற 5 கனரக வாகனங்கள் தப்பிச் சென்றுள்ளன என்று ஊர் மக்கள் தெரிவித்தனர்.**

அராலி மத்தியில் உள்ள வயல்களுக்கு அண்மையில் உள்ள மண் பிட்டி ஒன்றில் அதிகாலையில் மண் அகழப்பட்டுள்ளது. அந்தப் பகுதியைச்சேர்ந்த சிலர் வயலுக்குச்சென்ற போது அதை அவதானித்து, "அனுமதி எடுத்தா மண் அகழ்கின்றீர்கள்?" என வினவியுள்ளனர்.

"ஆம்!, அனுமதி எடுத்துவிட்டு பொலிஸாருக்குச் சொல்லிவிட்டுத் தான் மண் அகழ்கின்றோம். 12 மணிக்கு முதல் மண்ணை அகழ்ந்து ஏற்றிச் செல்ல வேண்டும்" என்று மண் அகழ்வில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்பின்னர் அந்தப் பகுதிக்குச் சென்ற ஊர் இளைஞர்கள், அவர்களிடம் அனுமதிப்பத்திரத்தைக் கோரியுள்ளனர். ஆனால், அவர்கள் அனுமதிப் பத்திரத்தைக் காண்பிக்கவில்லை.

அதையடுத்து கிராம அலுவலருக்கு இளைஞர்கள் தகவல் அனுப்பியுள்ளனர். கிராம அலுவலர் சம்பவ இடத்துக்குச் சென்று அனுமதிப்பத்திரத்தைக் கோரியபோதும், அவர்கள் அனுமதிப் பத்திரத்தைக் காண்பிக்கவில்லை.

அதையடுத்து மண் ஏற்றிக் கொண்டிருந்த வாகனங்கள் அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றுள்ளன. ஊர் இளைஞர்களும், கிராம அலுவலரும் சேர்ந்து அவற்றை மறிப்பதற்கு முயன்றபோது, அவர்களை மோதுவது போன்று அச்சுறுத்தி இரு ஜே.சி.பி. வாகனங்களும், 3 டிப்பர் வாகனங்களும் தப்பிச் சென்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. ஒரு டிப்பர் வாகனம் மட்டும் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிராம அலுவலரால் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குப் பல தடவை அழைப்பு ஏற்படுத்தப்பட்டு தகவல் தெரிவிக்கப்பட்ட போதும், அவர்கள் உடனடியாகச் சம்பவ இடத்துக்கு வரவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதன்பின்னர் கிராம அலுவலர், சங்கானைப் பிரதேச செயலருக்குத் தகவல் தெரிவித்துள்ளார். தாமதமாகவே சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சாரதியையும், டிப்பர் வாகனத்தையும் கொண்டு சென்றுள்ளனர். மழை நேரங்களில் கடல் நீர் வயல்களுக்குள் வராமல் இந்த மண்பிட்டியே தடுப்பு அணையாக உள்ளது. இந்த மண்பிட்டியை அகழ்ந்தால் கடல் நீர் வயல்களுக்குள் வந்து பயிர்ச்செய்கையையே நாசமாக்கிவிடும் என விவசாயிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். சுமார் 35 டிப்பருக்கும் மேற்பட்ட மண் அதிகாலை வேளை அகழப்பட்டுள்ளன என்றும் அவர்கள் கூறுகின்றனர். (எ-27)



# உரப் பற்றாக்குறையால் தேங்காய்க்குத் தட்டுப்பாடு

## தென்னை ஆராய்ச்சி நிறுவனம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 31

தென்னைப் பயிர்ச்செய்கைக்குப் பரிந்துரைக்கப்படும் உரங்கள் முறையாகக் கிடைக்காமையால் தேங்காய் உற்பத்தி இந்த ஆண்டில் 30 சதவீதம் குறையும் எனத் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

2019 ஆம் ஆண்டில் தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் புள்ளிவிவரங்களின்படி, தேங்காய்களின் வருடாந்தத் தேவை 4.9 பில்லியனாகும். ஆனால், நாட்டின் தேங்காய் அறுவடை 3.1 பில்லியன் காய்களாக உள்ளது. இந்தப் புள்ளிவிவரங்களின்படி, ஆண்டுக்கு 1.8 பில்லியன் தேங்காய்களுக்குப் பற்றாக்குறை ஏற்படுகிறது.

வெற்றிகரமான பயிர்ச்செய்கையைப் பராமரிப்பதற்கு, வருடாந்தம் தோட்டங்களுக்கு உரங்களைப் பயன்படுத்த வேண்டும்,

ஆனால், இலங்கையிலுள்ள பெரும்பாலான தென்னந்தோப்புகளுக்கு பல ஆண்டுகளாக உரமிடப்படவில்லை. அதனால் தென்னை மரங்களின் எதிர்ப்பு சக்தி வாடி வருவதால் ஏற்கனவே விவசாய நிலங்களில் நோய்கள் பரவி தேங்காய் அறுவடைக்கு நேரடியாகப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உரம் இல்லாததால் வளர்ச்சி குறைந்த தென்னை மரங்களுக்கு உரமிட ஆரம்பித்தாலும் தென்னந்தோட்டம் மீண்டு வளர்ந்து சரியான அறுவடைக்குவர குறைந்தது மூன்று ஆண்டுகள் எடுக்கும் என்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

### நல்லூர்ப் பிரதேசசபையால்

# சன நடமாட்டமான பகுதியில் தரம்பிரிக்கப்படும் கழிவுகள்!

## மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

திண்மக் கழிவுகளைத் தரம்பிரிக்கும் செயற்பாட்டை நல்லூர்ப்பிரதேச சபையினர் மக்கள் அதிகளவில் ஒன்றுகூடமிடத்தில் முன்னெடுப்பதால் சுகாதாரச் சீர்கேட்டுடன் அசௌகரியங்களுக்கு உள்ளாக நேரிடுகின்றது என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



யாழ்ப்பாணம்- திருநெல்வேலி நவீன சந்தைக்கு முன்பாகவுள்ள கடைத் தொகுதிகளுக்குப் பின்னாலுள்ள நல்லூர்ப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட இடத்திலேயே இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது. அங்கு உழவு இயந்திர வாகனத்துடன் கழிவுகளைத் தேக்கி வைத்து திண்மக் கழிவுகள் தரம்பிரிக்கப்படுகின்றன.

இந்தச் செயற்பாட்டால் குடியிருப்பாளர்கள், வர்த்தகர்கள், அலுவலகர்கள், வாகனச் சாரதிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் சுகாதாரச் சீர்கேடு அசௌகரியங்களுக்கு உள்ளாகுகின்றனர்.

சூழலை மாசடையச்செய்யும் இவ்வாறான செயற்பாட்டைப் பிரதேசசபையினர் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-இ)



# பெண்ணுக்கு உதவிய குடிவரவுத் திணைக்கள அதிகாரி கைது

கொழும்பு, ஜூலை 31

போலியான கடவுச்சீட்டு மற்றும் பயண ஆவணங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டுக்குத் தொழில் பெற்றுச் செல்ல உதவிய குற்றச்சாட்டில் குடிவரவு-குடியகல்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டு குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் அதிகாரிகளுக்கு இந்திய விசா மற்றும் விமான ரிக்கெற்றைக் காட்டி ஏமாற்றி, சுற்றுலா விசாவைப் பயன்படுத்தி ஓமானுக்குச் செல்ல முயன்ற பெண் ஒருவரையே அந்த அதிகாரி அழைத்துச்சென்றுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அந்தப் பெண் இந்தியாவுக்குச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றிருந்தபோதிலும், ஓமானுக்கான சுற்றுலா விசா மற்றும் பயணச்சீட்டு வைத்திருந்ததையடுத்து சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

# அரச அதிகாரிகளுக்கு ஜப்பானில் பயிற்சிகள்

கொழும்பு, ஜூலை 31

இலங்கையின் அரச துறையிலுள்ள இளம் நிறைவேற்று அதிகாரிகளுக்கு ஜப்பானிய பல்கலைக்கழகங்களில் பயிற்சி வழங்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய ஒப்பந்தம் இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று கொழும்பில் உள்ள ஜப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்த மனித வள அபிவிருத்தி புலமைப்பரிசில் திட்டத்துக்காக ஜப்பானால் 611 மில்லியன் ரூபா மானியமும் வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# தாமதிக்கப்படும் ஓய்வூதியம்

## ஓய்வூதியர்கள் நெருக்கடியில்

சாவகச்சேரி, ஜூலை 31

ஏழு மாதங்களாகியும் இதுவரை ஓய்வூதியம் கிடைக்காமையால் பெரும்பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என்று ஓய்வூதியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஓய்வூதிய வயது 60 என கடந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அதற்கமைய 60 வயதுக்கு மேல் கடமையாற்றிய 35 ஆயிரம் அரச அலுவலர்கள் கடந்த டிசெம்பர் 31ஆம் திகதியுடன் இளைப்பாறினர்.

ஒரே நாளில் பெரும் எண்ணிக்கையான அலுவலர்கள் ஓய்வு பெற்றதால் ஓய்வூதியத் திணைக்களத்தால் அவர்களின் கோவைகள் சரி பார்த்து அவற்றில் காணப்படும் குறைபாடுகளைத் திணைக்களங்களுக்கு அறிவித்து வருகின்றனர். அதனால் ஓய்வூதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, கடந்த ஜனவரி தொடக்கம் ஓய்வு பெற்றவர்களின் கோவைகள் சில இன்னமும் ஓய்வூதியத் திணைக்களத்துக்கு அனுப்பப்படாமல் அந்தந்தத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ளன. ஓய்வூதியத் திணைக்களத்தில் கோவைகள் வைக்க இடமின்மையால் கோவைகள் அனுப்புவதைத் தாமதப்படுத்துமாறு கோரியதால் திணைக்கள அலுவலகங்களில் ஓய்வூதியர்களின் கோவைகள் சீராக்கம் செய்யப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது என்றும் ஓய்வூதியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விரும்பும் தீர்வை ஒருபோதும் தரமுடியாது

## அமைச்சர் பந்துல திட்டவட்டம்

**கொழும்பு, ஜுலை 31**

**தமிழ் மக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் விரும்பும் சமஷ்டித் தீர்வையோ அல்லது தனிநாட்டுத் தீர்வையோ ஒருபோதும் வழங்கமுடியாது.**

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார். சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சர்வகட்சி மாநாடு தீர்வைக் காண்பதற்கான வழியாகும். ஆனால், இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இன முரண்பாடுகளை மேலும் வளர்க்கும் விதத்தில் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டிலுள்ள அனைத்து மக்களின் நன்மை கருதியே செயற்படுகின்றார். அவருடன் ஒன்றித்துப் பயணித்து அரசியல் தீர்வைக் காண்பதற்குத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் முயல வேண்டும். அதைவிடுத்து நடைமுறைக்குச் சாத்தியம் இல்லாத கருத்துகளை வெளியிட வேண்டாம் என்று அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நாட்டில் சமஷ்டித் தீர்வுக்கோ அல்லது தனிநாட்டுத் தீர்வுக்கோ நாடாளுமன்றம் ஒருபோதும் அனுமதி வழங்க மாட்டாது. ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களைப் பகிரும் வகையிலான தீர்வே இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் பிரச்சினை இல்லாத தீர்வு ஆகும் - என்றார். (எ22)

# 13 ஆவது திருத்தம் முதலில் வரட்டும் செய்ய வேண்டியதைச் செய்வோம்!

## மிரட்டுகிறார் எல்லே குணவங்ச தேரர்

கொழும்பு, ஜுலை 31

ஒரு தரப்பினரின் பிரச்சினைகளுக்கு மட்டும் தீர்வுகாண அரசாங்கம் முயற்சிப்பதைக் கடுமையாக எதிர்ப்போம். முதலில் 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வரட்டும். அதன்பின் செய்ய வேண்டியதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.

- இவ்வாறு தேசிய வளங்களைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என அரசாங்கம் குறிப்பிடுகிறது. நாட்டில் முதலில் இனப்பிரச்சினை என்பதொன்று உள்ளதா? என்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். இல்லாத பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடுவது தற்போதைய பிரச்சினைகளுக்குப் பிரதான காரணியாக உள்ளது.

நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏதாவதொரு பிரச்சினை உள்ளது. வங்குரோத்து நிலைக்கு மத்தியில் ஒரு தரப்பினரது பிரச்சினைகளுக்கு மாத்திரம் தீர்வு காண அரசாங்கம் முயற்சித்தால் அதைக் கடுமையாக விமர்சிப்போம். அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் முதலில் கொண்டு வரட்டும். அதன் பின் செய்ய வேண்டியதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.

தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை ஏதும் கிடையாது. அரசியல்வாதிகள் தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக முரண்பாடுகளைத் தோற்றுவிக்காமல் இருந்தால் பிரச்சினைகள் தோற்றம் பெறாது.

அரச நிறுவனங்களை மறுசீரமைக்கின்றோம் என்று குறிப்பிட்டுக் கொண்டு தேசிய வளங்களைத் தனியார் மயப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. இருக்கும் வளங்களை விற்பது, கடன் பெறுவது ஆகியன மாத்திரம் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையாகக் காணப்படுகிறது. தேசிய வளங்களைத் தனியார் மயப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சியை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம் - என்றார். (எ-இ)



# எரிபொருள் விலையில் அடுத்த மாதம் மாற்றம்

கொழும்பு, ஜுலை 31

எரிபொருள் விலையில் அடுத்த மாதம் மாற்றங்கள் ஏற்படலாம் என இலங்கைக் கனியவளக் கூட்டுத்தாபனம் அறியப்படுத்தியுள்ளது என்று கனியவள மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியாக செயற்படும் ஒக்ரேன் 92 ரக பெற்றோலை விநியோகிக்கும் 101 எரிபொருள் நிலையங்கள் 50 சதவீதமான கையிருப்பைக் கொண்டிருக்கவில்லை எனவும், ஓட்டோ டீசலை விநியோகிக்கும் 61 விநியோகத்தர்களும் 50 சதவீதமான கையிருப்பைக் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# மாகாண மட்டத்தில் பட்டதாரிகளுக்கு நியமனம்

ஆசிரிய சேவைக்குப் புதிய பட்டதாரிகளை இணைத்துக்கொள்வது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் ஆகிய பாடங்களில் புதிய பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் தடை உத்தரவு காரணமாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தாமதமாகும் - என்றார். (எ-இ)




**ஈழத்துச் சிவசேனை எண்ட ஒரு அமைப்பு இஞ்ச இருக்காம். அவைக்கு ஆமிக்காரர் ஏதும் அடாத்தா கோயில், குளத்தைப் பிடிச்சாலோ அழிச்சாலோ கண்ணுக்குத் தெரியாது. அதை மாதிரிபுத்தரின்ர பேரச்சொல்லிக்கொண்டுவந்து எங்கட கோயில் எல்லாத்துக்கும் மேல விகாரை கட்டினாலும் உறைக்காது. ஆனால் எங்கட இனத்துக்க வேதக்காரர் ஏதும் தும்மினால்கூட 'பறங்கியள் எங்களை அழிக்கத் தும்முறாங்கள்' எண்டு காவி வேட்டியைக் கொடுவாக் கட்டிக் கொண்டு கோதாவில இறங்கிடுவினம்.**

**இப்பிடி இருக்கிற இந்தக் காவிக்கும்பல், குருந்தூர்மலையில சிவன் கோயில் இருந்த இடத்தை பிக்குமார் அடாத்தாப் பிடிக்கேக்கையும், அங்க பெரிசா விகாரை கட்டேக்கையும் நவதுவாரங்களையும் பொத்திக்கொண்டுதான் இருந்தது. பிறகு இப்ப ஆதி ஐயனுக்கு பொங்கல் வைக்கப் போனவைக்கு அடிச்சுக் கலைக்கேக்கையும், கற்பூரத்தீபத்தை காலால உழக்கி நூக்கேக்கையும் காவி வேட்டியால கண்ணைக் கட்டிக் கொண்டு இருந்தது இந்தக் குரூப். எல்லாம் ஓய்ஞ்ச பிறகு, இவ்வளவுகாலமும் சனம் குருந்தூர்மலை ஐயனுக்காகச் செய்த போராட்டத்தைக் கேவலப்படுத்துறக்காக, இந்தச் சிவசேனைக் கும்பல் பிளான் போட்டு, குருந்தூர் மலைக்குப் போய், அங்க எங்கட நிலத்தைப் பிடிச்சு, கோயிலை அழிச்ச பிக்குவோட கும்மியடிச்சு, புத்தரைக் கும்பிட்டுட்டு வந்திருக்கினம். அங்கத்தைச் சனம் இந்தக் கும்பலில் ஆரையும் நேரில கண்டால் அப்பிடியே உயிரோட கொளுத்துற அளவுக்குக் கோபத்தில நிக்குதுகள்.**

**"அறப்படிச்ச மறவன்புலவாரும், நீங்களும் எதுக்காகக் குருந்தூர் கூழ்ப்பானைக்குள்ள விழுந்தனீங்கள் ?" எண்டு கேட்டால் "அங்க போய் புத்தரையும் சிவனையும் கும்பிட்டம்'' எண்டு அவையிட்ட இருந்து பதில் வருகுது . "விகாரையில எங்க சிவன்?" எண்டு பட்சி திருப்பிக் கேக்க, ''விகாரைக்கு மேல தூபியில சிவனைத்தான் வைச்சிருக்கு, அவரைத்தான் கும்பிட்டம்'' எண்டு உருட்டிச்சினமே ஒரு உருட்டு. அதோட "சைவத்தை ஒருக்காலும் பௌத்தம் நசுக்கேலை, உந்த வேதக்காரர்தான் சைவத்தையும் , பௌத்தத்தையும் அழிக்கிறாங்கள்" எண்டும் ஒரு சாட்டுச் சொல்லிச்சினம். "அப்பிடி எங்க கிறிஸ்தவம் சைவக்கோயிலை அழிச்சது?" எண்டு கேக்க "மன்னாரில பறங்கியள் அழிச்சவை" எண்டுகினம். நானூறு வருசத்துக்கு முதல் நடந்ததை இப்ப நடந்த மாதிரி பீல் பண்ணிக்கொண்டு, இப்ப கண்ணுக்கு முன்னால நடக்கிற அழிப்பைக் கண்டும் காணாமல் இருக்கிறதுக்கு என்ன பேரெண்டு தெரியேலை. குருந்தூர்மலையில இவை செய்த வேலையைப் பார்த்த பிறகு "உது சிவசேனா இல்லை புத்தசேனா" எண்டுதான் சனம் கதைக்குதுகள். தெரியாமல் பிழை விடுறவங்களை ஒண்டும் செய்யேலாது. ஆனால் தெரிஞ்சு கொண்டே பிழை விடுறவையை என்ன செய்யலாம்?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெட் வேகத்தில் "எக்ஸ்"

நியூயோர்க், ஜூலை 31



ருவிற்றர் பயனாளர்கள் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்பட்டுள்ளது என்று அதன் உரிமையாளர் எலான் மஸ்க் அறிவித்துள்ளார். அதற்கான தரவுகளையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கக் கோடீஸ்வரரான எலான்மஸ்க், பிரபல சமூக வலைத்தளமான ருவிற்றரை அண்மையில் விலைக்கு வாங்கியிருந்தார். அதன்பின்னர் அவர் அதில் பல மாற்றங்களைச் செய்துவருகின்றார். தற்போது அதன் லோகோவிலும் மாற்றம் செய்திருக்கின்றார். லோகோவில் இருந்த குருவியைத் தூக்கிவிட்டு "எக்ஸ்" என்ற எழுத்து சின்னமாக அறிவிக்கப்பட்டிருந்தது. அண்மையில் பேஸ்புக் நிறுவனம் ருவிற்றருக்குப் போட்டியாக "திரெட்ஸ்" என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்தியிருந்தது.

அதன்பின்னர் ருவிற்றரின் வருமானம் குறைவடைந்துள்ளது என்று கூறப்பட்டு வருகின்றது. அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த எலான் மஸ்க், "கடன் சுமையாலும், விளம்பர வருவாய் குறைந்துள்ளதாலும் ருவிற்றர் நிறுவனம் பின்னடைவைக் கண்டிருக்கின்றது" என்று கூறியிருந்தார்.

இதிலிருந்து ருவிற்றரை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். தற்போது ருவிற்றரின் மாதாந்திர பயனர் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது என்று எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

தற்போது அதன் பயனர்களின் எண்ணிக்கை சுமார் 5.4 கோடி (540 மில்லியன்) என உறுதிப்படுத்தும் விதமாக சில புள்ளி விவரங் களையும், விளக்கப்படங்களையும் பதிவிட்டிருக்கிறார் .

2022 ஆம் ஆண்டு மே மாதம் ருவிற்றருக்கு சுமார் 2.3 கோடி (229 மில்லியன்) பயனாளிகள் இருந்தனர். (எ-இ)



# 'காக்கா — கழுகு' ரஜினியின் குட்டிக்கதை!

சென்னை, ஜூலை 31

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் 'ஜெயிலர்' இசை வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்ற நிலையில், அதில் ரஜினி சொன்ன குட்டிக் கதை தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் வெளிவரவுள்ள 'ஜெயிலர்' படத்தில் ரஜினி, தமன்னா, ரம்யா கிருஷ்ணன், சிவராஜ்குமார், மோகன்லால் உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் நடித்துவருகின்றனர்.

இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார்.

எதிர்வரும் 10ஆம் திகதி இந்தத் திரைப்படம் வெளியாக உள்ள நிலையில் படத்தின் இசை வெளியீட்டு நிகழ்வு சென்னையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் ரஜினி தனது உரையில் ஒரு குட்டிக்கதையொன்றை விவரித்தார்.

"காட்டில் சிறிய மிருகங்கள் எப்போதும் பெரிய மிருகங்களைத் தொல்லை செய்து கொண்டே இருக்கும். உதாரணத்துக்கு காகம் எப்போதும் பெரிய கழுகை சீண்டிக் கொண்டேயிருக்கும். ஆனால், கழுகு எப்போதுமே அமைதியாகவே இருக்கும். பறக்கும் பொழுது கழுகைப் பார்த்து காகம் உயரமாகப் பறக்க நினைக்கும். ஆனாலும் காகத்தால் அது முடியாது. கழுகு தன் இறக்கையைக் கூட ஆட்டாமல் எட்ட முடியாத உயரத்தில் பறந்துகொண்டே இருக்கும்" இவ்வாறு ரஜினி கூறினார்.

ரஜினி இந்த குட்டிக் கதையை யாரை மனதில் வைத்துச் சொல்கிறார் என்று தற்போது சமூக வலைத்தளங்களில் ரசிகர்கள் விவாதம் செய்து வருகின்றனர். (ச-இ)

# உணவக முன்பதிவுக்கு 4 ஆண்டு காத்திருப்பு!



நியூயோர்க், ஜூலை 31

ஒரு மேசையை முன்பதிவு செய்ய உங்களுக்குப் பிடித்த உணவகத்துக்கு அழைப்பு விடுக்கும்போது நான்கு வருடங்கள் காத்திருக்க வேண்டும் என்று சொன்னால் எப்படி உணருவீர்கள்? இங்கிலாந்து - பிரிஸ்டலில் அமைந்துள்ள பேங்க் டேவர்ன் உணவகத்தில் 4 வருடங்களுக்கு முன் பதிவு செய்துவைத்துள்ளனர்.

காத்திருப்புப் பட்டியல் நான்கு ஆண்டுகளைக் கடந்துள்ளதால், புதிய முன்பதிவுகளை நிறுத்த பேங்க் டேவர்ன் முடிவு செய்துள்ளது. மாட்டிறைச்சியின் மேல்புறம், பன்றி இறைச்சி, வறுத்த ஆட்டுக்குட்டி கால் மற்றும் காய்கறி பருப்பு, பான் ஆகியவை இங்கு பிரபலம்.

அதுவும் வார இறுதியில் இந்த உணவகத்துக்கு மவுசு அதிகமாக இருக்குமாம். இதுகுறித்து உரிமையாளர் சாம் கிரிகோரி, "தற்போது முன்பதிவு செய்யும் வசதியையும் நிறுத்தி வைத்திருக்கிறோம். ஒன்லைனில் முன்பதிவு செய்யமுடியாது" என்று தெரிவித்துள்ளார். (எ-இ)



# சீனாவைப் புரட்டிய டொக்சூரி புயல்!

பீஜிங், ஜூலை 31

பசுபிக் பெருங்கடலில் உருவான டொக்சூரி புயல் சீனாவின் புஜியான் மற்றும் குவாங்ஷோ மாகாணங்களைத் தாக்கியதில் சுமார் 7 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

175 கி.மீற்றர் வேகத்தில் வீசிய காற்றால் மரங்கள், மின்கம்பங்கள் சரிந்து விழுந்தன. பலத்த மழையால் பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் சுமார் 10 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது புயல் வலுவிழந்ததை அடுத்து மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. டொக்சூரி புயல் காரணமாகத் தலைநகர் பீஜிங் மற்றும் அதைச் சுற்றியுள்ள மாகாணங்களில் சிவப்பு எச்சரிக்கையை அந்த நாட்டின் வானிலை மையம் விடுத்துள்ளது.

புஜியான் மாகாணத்தில் கரையைக் கடந்து புயல், நாட்டின் வடக்குப் பகுதியில் நிலைகொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் தலைநகர் பீஜிங் உள்ளிட்ட பல பகுதிகளில் பலத்த மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பீஜிங்கில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்த மழை நாளைவரை நீடிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பீஜிங்கில் பூங்காற்று ஏரிகள் மற்றும் ஆற்றங்கரைச் சாலைகள் மூடப்பட்டுள்ளன. (எ-இ)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆனாலும், தேவையான பணம் கையில் இருக்கும். எதிர்பார்த்த செய்தி கிடைக்கும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். குழப்பங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டு. இழுபறியாக இருந்த காரியம் நடைபெறும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். மனதில் துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வ வழிபாடு செய்வீர்கள்.

**கன்னி:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மற்றவர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு தருவர்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். அதேபோல் செலவுகளிலும் சற்றுக் கவனம் செலுத்துவது நல்லது. தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். குடும்பத்துடன் தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடியன் கொலைகளுக்கு முற்றுப்புள்ளி இல்லையா?

வடக்கில் இடியன் துப்பாக்கிகள் இயல்பு வாழ்வில் பெரும் பாதிப்பை உண்டுபண்ணக்கூடிய அதிபயங்கர ஆயுதங்களாக உருவெடுக்கத் தொடங்கியுள்ளன. வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இந்த இடியன் துப்பாக்கிகள் உயிர்கொல்லும் கருவிகளாக அண்மைக்காலமாக உறுமத் தொடங்கியுள்ளன. இதுவரை காலமும் தனியே வேட்டைக்காகப் பயன்படுத்தப்பட்ட, காட்டு விலங்குகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட இடியன் துப்பாக்கிகள் இப்போது சக மனிதர்களை நோக்கியும் நீட்டப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கணநேரக் கோபங்களைத் தீர்த்துக்கொள்ள கையிலிருக்கும் இடியன்கள் கருவிகளாகின்றன. விளைவு, பெறுமதியான மனித உயிர்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் காவு கொள்ளப்படுகின்றன. குடும்பப்பகை, காதல் தோல்வி, பழிவாங்கல், சொத்துப்பிரச்சினை என்ற காரணங்களாலேயே அதிகளவு உயிர்களை இடியன் துப்பாக்கிகள் குடித்துள்ளன.

இந்த இடியன் துப்பாக்கிகளை காட்டில் வேட்டைக்குச் செல்வோர் சர்வசாதாரணமாகத் தயாரிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளனர். இதை உருவாக்க மிகப்பெரிய செலவுமில்லை. வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்கள் போரின் எச்சங்களை அதிகம் சுமந்து கொண்டிருப்பதால், அத்தகைய வெடிக்காத நிலையில் உள்ள எறிகணைகள், வெடிகுண்டுகள் என்பவற்றில் இருந்து இடியன் துப்பாக்கிகளுக்குரிய வெடிமருந்துகளையும் சட்டவிரோதமாகப் பெற்றுக்கொள்கின்றனர். இடியன் துப்பாக்கிகள் சட்டவிரோதமானவை. ஆயினும் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இவற்றைப் பலரும் சொந்தமாக வைத்திருக்கவே செய்கின்றனர். சிலர் அவற்றை வீடுகளில் வைத்திருக்காமல் காட்டையொட்டிய பகுதிகளில் மறைத்து வைத்திருந்துவிட்டு, தேவையானபோது மட்டும் அவற்றைப் பயன்படுத்துவதுண்டு.


நவீனரக துப்பாக்கிகளை விட இடியன் துப்பாக்கிகள் கையாள்வதற்கும் இலகுவானவை, அதேநேரம் பாதுகாப்புத்தன்மையும் குறைந்தவை. அதனால் எதிர்பாராத தருணங்களில் இடியன் துப்பாக்கிகள் தவறுதலாக வெடித்து, அதன் உரிமையாளர்களைக் காவு வாங்கிய சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. அத்தோடு காட்டில் உள்ள, பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினங்களையும் இடியன்கள், சகட்டுமேனிக்கு கொன்று தள்ளுகின்றன. வன்னிப்பிராந்தியக் காடுகளில் இடையிடையே தந்தத்துக்காகக் கொல்லப்பட்ட யானைகளுக்கும் இதே இடியன் துப்பாக்கிகளே எமனாகியிருந்தன. யானைகளை மாத்திரமல்லாமல் மான், மரை, காட்டுப்பன்றி, உடும்பு , உக்கிளான் என்று இடியன்களுக்கு இரையாகிய உயிரிகள் ஏராளம். எப்படிப் பார்த்தாலும் இடியன்கள் நாசகாரத்தையே உண்டுபண்ணுகின்றன. மானைக் கொன்று, மரையைக் கொன்று, இப்போது மனிதர்களையும் கொல்லத் துடிக்கும் இடியன்களை முற்றாக இல்லாதாக்குவதே எல்லைமீறும் கொலைக் கலாசாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வழியெனலாம்.

இடியன் துப்பாக்கிகளை வைத்திருப்போரைக் கண்டறிவதோ, அவற்றைக் கைப்பற்றுவதோ சவாலான விடயம்தான். ஏனெனில் அவற்றைப் பலரும் பாகம் பாகமாகவே பிரித்து வைத்திருப்பார்கள். வெறும் மரத்துண்டாகவும், இரும்புக்குழாய்களாகவும் சிதறுண்டு கிடக்கும் பாகங்களைத் தேவையானபோது மட்டும் இடியனாகப் பொருத்தி முழுமையாக்குவர். என்றாலும் இடியன்களை வைத்திருப்போர் எனச் சந்தேகிக்கப்படுவோரைக் கண்காணித்தல், சட்டவிரோத வெடிமருந்துக் கையாள்கையைக் கண்டறிந்து இல்லாமலாக்குதல், அதிகளவு இடியன் பயன்பாடு உள்ள இடங்களில் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்தல் போன்றவற்றின் மூலம் பொலிஸார் இடியன்களின் உலாவுகையை பெருமளவுக்கு கட்டுப்படுத்த முடியும். ஆனால், பொலிஸாரும் இந்த விடயத்தில் பாராமுகமாக இருப்பதே அதிகளவு இடியன் கொலைகள் நடந்தேறக் காரணம் எனவும் சொல்லப்படுகின்றது. இந்தநிலையில் இடியன்களைப் பயன்படுத்துவோரும் அதன் நாசகாரத் தன்மையை உணர்ந்து, இடியன் பாவனையைக் கைவிடுவதே சமூகத்தில் இடியன்கள் பற்றி எழுந்திருக்கும் அச்சத்தைக் குறைக்கும்.

## நாளொரு நல்வார்த்தை

உங்களால் முடியும் என்று நம்புங்கள், அதுவே உங்களுக்கான பாதி வெற்றி.

- தியோடோர் ரூஸ்வெல்ட் -




# கடன் மறுசீரமைப்பின் பின்னரே இலங்கைக்குப் புதிய கடன்கள்!

## ஜப்பான் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 31**

**ஜப்பானின் பரிசீலனைக்காக இலங்கை அரசாங்கத்தால் பல முதலீட்டு முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளில் சாதகமான முடிவு எட்டப்பட்ட பின்னரே புதிய கடன் வழங்கப்படும்.**

- இவ்வாறு ஜப்பானின் ஊடக மற்றும் இராஜதந்திர துறைக்கான பிரதிப்பணிப்பாளர் நாயகம் யுகிகோ ஒகானோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜப்பானின் தற்போதைய கவனம், இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயன்முறைக்கு முடிந்தவரை விரைவாகவும் சுமுகமாகவும் உதவுவதாக மட்டுமே இருக்கும்.

ஜப்பானிய அரசாங்கத்தால் நிதியளிக்கப்படவிருந்த, கைவிடப்பட்ட இலகு ரயில் போக்குவரத்துத் திட்டம்போன்ற குறிப்பிட்ட திட்டங்கள், ஜப்பானிய வெளியுறவு அமைச்சரின் பயணத்தின்போது விவாதிக்கப்படவில்லை.

பொறுப்பான கடனளிப்பவர் என்ற வகையில், ஏற்கனவே கடனில் உள்ள நாடுகளுக்கு கடன் வழங்கக்கூடாது - என்றார். (எ-இ)

# கடன் நிவாரண முயற்சிகளில் சீனாவும் பங்கேற்க வேண்டும்

## இந்தியா அழைப்பு

கொழும்பு, ஜூலை 31

இலங்கையின் கடன் நிவாரண முயற்சிகளில் சீனாவும் இணைந்துகொள்ள வேண்டும் என்று இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைக்கு அதிகளவு கடன் வழங்கிய நாடு என்ற அடிப்படையில் இலங்கையைக் கடன் நெருக்கடியில் இருந்து மீட்பதற்காக இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகள் மேற்கொண்டுள்ள முயற்சிகளில் சீனாவும் இணைந்துகொள்ள வேண்டும். அதேநேரம் கடன் நெருக்கடியில் சிக்கியுள்ள நாடுகளுக்கான நிவாரண நடவடிக்கைகளை உலக வங்கியும், நாணய நிதியமும் துரிதப்படுத்தவேண்டும் - என்றார். (எ-இ)

# இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்குவதை நிறுத்த முடிவு

அதிக செலவு காரணமாக இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்குவதைத் தற்காலிகமாக நிறுத்தப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஒரு இலத்திரனியல் கடவுச்சீட்டைத் தயாரிப்பதற்கு 20 டொலர் செலவாகின்றது. வருடாந்தம் சுமார் 7 இலட்சத்து 50 ஆயிரம் கடவுச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன. அதற்கு 15 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மீண்டும் இலத்திரனியல் கடவுச்சீட்டு முறைமையை ஆரம்பிக்கும் வரையில் சாதாரண கடவுச்சீட்டு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

**நாளை** 01.08.2023 செவ்வாய்க்கிழமை ஆடி 16

சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 03.03 - 04.33
(பூரணை விரதம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை வளர்ப்பு உரிமம் அவசியம்!

## கிளி. அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, ஜூலை 31

கால்நடை உரிமையாளர்கள் கால்நடைகளுக்கான உரிமைகளையும் பட்டிக்கான அனுமதியையும் பெற்றிருத்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திகுழுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் தற்பொழுது பல பகுதிகளிலும் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. காட்டாக்காலி மாடுகள் பயிர் நிலங்களுக்குள் புகுந்து பயிரழிவுகளை ஏற்படுத்துகின்றன. இரவு வேளைகளில் கால்நடைகள் கட்டாக்காலியாகத் திரிவதால் வீதி விபத்துகளும் அதிகரித்துள்ளன எனப் பொதுஅமைப்புகள் சுட்டிக்காட்டின.

அதற்கமைய கால்நடை உரிமையாளர்கள் கால்நடை மருத்துவரை நாடி கால்நடைகளுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. (ச- 113)

## 'லயத்துக் கோழிகள்' நெடுநாடக ஆற்றுகை

யாழ்ப்பாணம், ஜூலை 31

பல்வேறு விருதுகளையும் வென்ற புகழ்பெற்ற இளம் மலையக நாடகச் செயற்பாட்டாளர் இ.லோகானந்தனின் நெறியாள்கையில் உருவாகி, இன்னும் பல இளம் அரங்க ஆளுமைகளின் பங்குபற்றலுடன், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆற்றுகை செய்யப்பட்டுவருகின்ற 'லயத்துக் கோழிகள்' நெடுநாடகம் யாழ்ப்பாணத்தில் காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

செம்முகம் ஆற்றுகைக் குழு மற்றும் மறுமலர்ச்சி மன்றம் ஆகிய அமைப்புகளின் ஒழுங்கமைப்பில் முற்றிலும் இலவசமாக இடம்பெறும் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாடக ஆற்றுகை நிகழ்வுக்கு அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ய)

# சீரற்ற பஸ் சேவையால் மாணவர்கள் அந்தரிப்பு

## பெற்றோர் விசனம்

**யாழ்ப்பாணம், ஜூலை 31**

**கே.கே.எஸ்.வீதி ஊடாக 769 ஆம் இலக்க வழித்தடத்தில் பாடசாலைச் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. சேவை சீரின்மையால் மாணவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர் என்று பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.**


இதுதொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-

இந்த வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் ஆண்கள், பெண்களுக்கான பாடசாலைப் பேருந்துச் சேவை சீரின்றிக் காணப்படுகிறது.

மாணவர்கள் பாடசாலை செல்லும் காலை வேளைகளில் பேருந்து அடிக்கடி உரிய நேரத்துக்கு வருவதில்லை. நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியநிலையில் பேருந்தின் தாமதம் காரணமாக நேரம் பிந்தி பாடசாலைக்குச் சமுகமளிக்கின்றனர்.

அதனால் பாடசாலையின் தண்டனைக்கும் கண்டிப்புக்கும் அவர்கள் ஆளாகுகின்றனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை அதிகாரிகள் இது தொடர்பில் கவனம்செலுத்தி மாணவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடியைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர். (ச-66)



## ஜெலட்டின் குச்சிகள் அரியாலையில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணம், அரியாலை கடற்கரைப் பகுதியில் ஒருதொகை ஜெலட்டின் வெடிமருந்துக் குச்சிகள் மீட்கப்பட்டுள்ளன.

மண்டைதீவு கடற்படையினருக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் வெடிமருந்துக் குச்சிகள் மீட்கப்பட்டன.

இதுதொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-20)

## பேராசிரியராக பதவி உயர்வு



யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின்படி மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி தனேஸ்வரி இரவீந்திரன் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ச-27,26)

## இரு வேறு குற்றச்செயல்கள்; கிளிநொச்சியில் மூவர் கைது



கிளிநொச்சி, ஜூலை 31

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இருவேறு குற்றச்செயல்கள் தொடர்பில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி , தருமபுரம் - கல்லாறுப் பகுதியில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணாக மணல் ஏற்றிச் சென்ற இரண்டு டிப்பர்கள் கையகப்படுத்தப்பட்டதுடன் சாரதிகள் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

அதேவேளை, சுண்டிக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக 11 முதிரை மரக்குற்றிகளை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தடயப்பொருள்களையும் சந்தேகநபர்களையும் எதிர்வரும் 3 ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி. எம் .சதுரங்க தெரிவித்தார். (ச-113)

## ஹெரோய்னுடன் கைது நால்வருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஜூலை 31

உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இரண்டு பெண்கள் உட்பட நால்வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸார் நகர்ப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவுபிறப்பித்தது. (ச-125)

# வீட்டுக்குள் கடலாமை; உரிமையாளர் கைது!

மன்னார், ஜூலை 31

மன்னார், பனங்கட்டிக்கொட்டுப் பகுதியிலுள்ள வீடொன்றில் கயிற்றால் கட்டி உயிருடன் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் 160 கிலோ கிராம் எடையுடைய கடல் ஆமை மீட்கப்பட்டுள்ளது. அதை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினருக்குக் கடந்த வியாழக்கிழமை கிடைத்த தகவலுக்கமைய கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட சோதனையில் ஆமை மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட கடலாமை வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. கடலாமையின் உடலில் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதால் அதற்குச் சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ச-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் வீரசிங்க மண்டபத்தில்
08.08.2023 வரை

# ஆடி மாத ஆடை தள்ளுபடி

## ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலை சிறந்த ஆடைகள்



- திருமணப்பட்டுச் சாறிகள்
- கொட்டன் சாறிகள்
- சல்வார்கள்
- சல்வார் துணிகள்
- புத்தம் புது டொப் வகைகள்
- மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடை தெரிவுகள்.....

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

## இந்தியன் செலக்ஷன்

காலம்: 15.07.2023 - 06.08.2023
இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 15 • 10 • 1942



இறப்பு 01 • 07 • 2023

## திருமதி யோகலீலா தேவசுந்தரம்

அக்கா.... !

உம் கைப்பட எழுதிய நினைவஞ்சலிகளோ பல - இன்று
உமக்கு நினைவஞ்சலி எழுதுகின்றோம் நாம் - கண்ணீருடன்
எம் ஐவரையும் பெற்றெடுத்தவர் எமது தாயாராயினும்
உடன் பிறப்புக்கள் நால்வருக்கும் தாயும். தந்தையாயும்
இருந்து நாம் கௌரவமாக வாழ உயரிய வழிகாட்டியவர் நீர்
எம்மை மட்டுமல்ல. இன்று உங்கள் வழிகாட்டலில்
சிறப்பாக வாழ்பவர்கள் பலர்
காலப்போக்கில் நாம் பல திசைகளில் பிரிந்து வாழ்ந்தாலும்
உள்ளத்தில் பிரிவின்றி ஒன்றாக வாழ்ந்தோம்
அக்கா ! உங்கள் வாழ்க்கையில் நீங்கள் ஆசைப்பட்டது
எதுவும் இல்லை ஆனால் இறுதி நாட்களில் நல்லூரானிடம்
நீங்கள் இறைஞ்சிக் கேட்டது திடீர் மரணம்
கேட்டவுடன் தந்துவிட்டார் நல்லூரான் திடீர் மரணம்
உங்கள் திடீர் மறைவால் ஏங்கித்தவிக்கின்றோம் நாம்
அக்கா ! மெழுகு திரிபோல கரைந்த உங்கள் வாழ்க்கை
என்றுமே அழியாத காவியம்
மண்ணுலகில் பாசத்துடன் நாம் வாழ்ந்தவாறே விண்ணுலகிலும்
நாம் ஒன்றிணைவோம் - காத்திருங்கள் வெகுவிரைவில்.....
எங்கள் அக்காவின் ஆத்மா அமைதிபெற பிரார்த்திக்கின்றோம்.

**கண்ணீருடன் உங்கள் உடன் பிறப்புக்கள்**

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## சிவசோதிலிங்கம் சொரூபன்

அன்னை மடியில் 20.06.1984
ஆண்டவன் அடியில் 10.08.2022

எங்கள் வாழ்வின் எழுச்சி கண்டு
உள்ளம் பூரித்து உவகை கண்டாய்
உன்னை மெழுகாய் உருக்கியே
எம்மைக் காத்து நின்றாய்
என்றும் எம்மோடு இருப்பேன் என்று
அடிக்கொருமுறை கூறிடுவாய் - ஐயா
ஆண்டொன்று கடந்தது...... நீ ஓடி மறைந்து
நீண்ட துயரில் நாம் இங்கு தவிக்கின்றோம்
நீ இல்லா இவ்வுலகில்.....

**குடும்பத்தினர்**
புன்னாலைக்கட்டுவன் தெற்கு
சுன்னாகம்.
077 958 6964

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரி.ஆர்.சி. உருவாக்குவதால் ஒரேநாளில் எல்லாம் மாறாது

## வெளிநாட்டுத் தூதரகங்கள் அறிவுரை

கொழும்பு, ஜூலை 31

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை (ரி.ஆர்.சி.) உருவாக்குவதனால் ஒரேநாளில் எல்லாம் மாறிவிடாது. மாற்றம் ஏற்படுவதற்குக் காலம் எடுக்கும். இலங்கையின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டவரைவின் உள்ளடக்கம் என்னவென்று எமக்குத் தெரியாது. இருப்பினும் இவ்விடயத்தில் நாம் நடுநிலையாகவே செயற்படுகின்றோம் என்று தென்னாபிரிக்கா, சுவிற்ஸர்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் இராஜதந்திரிகள் சிவில் சமூகப்பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளனர்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பொறிமுறையை உருவாக்குவதற்கு அவசியமான ஒத்துழைப்புகளை இலங்கைக்கு வழங்கிவரும் தென்னாபிரிக்கா, சுவிற்ஸர்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களான சன்டைல் எட்வின் ஸ்கால்க், டொமினிக் பக்ளௌர் மற்றும் மிஸுகொஷி ஹிடேகி ஆகியோருக்கும் சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் நடைபெற்றது.

இதன்போது அரசாங்கத்தால் கடந்த காலங்களில் பல ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டபோதிலும், அவற்றின் செயற்பாடுகளால் எவ்விதப் பயனும் கிட்டவில்லை என்று இராஜதந்திரிகளிடம் சுட்டிக்காட்டிய சிவில் சமூகப்பிரதிநிதிகள், எனவே அதன் நீட்சியாகத் தற்போது அரசாங்கம் உருவாக்குவதற்குத் திட்டமிடும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின்மீது தமக்கு எவ்வித நம்பிக்கையோ அல்லது எதிர்பார்ப்போ இல்லை என்றும் தெரிவித்தனர்.

அதற்குப் பதிலளித்த இராஜதந்திரிகள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான அவசியமான ஒத்துழைப்புகளைத் தாம் இலங்கைக்கு வழங்கிவருகின்ற போதிலும், அந்த ஆணைக்குழு தொடர்பான சட்டவரைவின் உள்ளடக்கம் பற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்று குறிப்பிட்டனர். எனவே உத்தேச ஆணைக்குழு தொடர்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகளின் நிலைப்பாடு என்னவென்பதைக் கேட்டறிந்து, அதற்கமைவாக அரசாங்கத்திடம் சில நிபந்தனைகளை முன்வைப்பதற்கு எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தனர். (அ-ஒ.இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் • 21 • 04 • 1942



மறைவு • 30 • 07 • 2023

### திருமதி கந்தையா சரஸ்வதி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சரஸ்வதி நேற்று (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், விவேகானந்தா (ஜேர்மன்), இந்திராணி (தேவி - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரவீந்திரராஜா (ரவி -சுவிஸ்), சுமதி, வனஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுவர்ணலதா (சுவிஸ்), சீவரத்தினம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கஜனி, இலக்கியா, சாதனா, அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பாற்பண்ணை திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொகள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
076 655 1652

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி.

(cs 51461) (N.1)


# குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

**கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்**

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

**15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!**

**சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்**



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிந்து கைது; மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

கொழும்பு, ஜூலை 31
இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் தரிந்து உடுவரகெதர கைது செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
தரிந்து கடந்த வெள்ளிக்கிழமை பொரளையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றின்போது அவர் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-இ)

# இலங்கை – இந்தியா இடையிலான எரிபொருள் விநியோகத் திட்ட ஆய்வு நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 31
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான எரிபொருள் விநியோக குழாய்த் திட்டத்துக்கான செயற்பாட்டு ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தச் செயற்பாட்டின் ஆய்வை ஓகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது என்று இந்தியா அறிவித்துள்ளது.
இந்த அறிவிப்பைத் தொடர்ந்து அதற்கான ஒத்துழைப்பு முழுமையாக வழங்கப்படும் என்று ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க இந்தியாவுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.
இந்தியாவின் தென் பகுதியின் நாகப்பட்டினத்தை அண்மித்த பிரதேசத்திலிருந்து இலங்கையை நோக்கி எரிபொருள் விநியோகக் குழாய்த் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. கடலுக்கு அடியில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தக் குழாய்த் திட்ட மானது இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கை நோக்கி முதல் கட்டமாக விஸ்தரிக்கப்பட உள்ளது.
வடக்கில் மன்னார் மற்றும் வவுனியா வரையிலும், கிழக்கில் திருகோணமலை வரையிலும், இதன் பிரதான எரிபொருள் குழாய் கொழும்பு வரைக்கும் விஸ்தரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எரிபொருளை உள்வாங்குதல் மற்றும் விநியோகித்தல் ஆகிய இரு செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாக அமையப்பெறவுள்ள இலங்கை – இந்திய எரிபொருள் குழாய்த் திட்டத்திற்கான அனைத்து பூர்வாங்கல் நடவடிக்கைகளும் தற்போது நிறைவடைந்துள்ளன. திட்டத்துக்கான செயற்பாட்டு ஆய்வைத் தொடர்ந்து முதல் கட்ட பணிகள் முன்னெடுக்கப்படும் என்று சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
இந்தியாவால் முன்மொழியப்பட்ட இந்த இணைப் புத் திட்டமானது, 'அண்டைய நாடுகளுக்கு முதலிடம்', கொள்கைத் திட்டத்தில் ஆற்றல் வள இணைப்புத் திட்டங்களை மையப்படுத்தியதாகும். ஏற்கனவே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பல்வேறு துறைசார் ஒத்துழைப்புகள் காணப்படுகின்றபோதிலும், ஆற்றல் வளத்தை மையப்படுத்திய இவ்வாறான நேரடி இணைப்புகள் இல்லை. இந்தத் திட்டத்தில் இலங்கை மாத்திரமன்றி இந்தியாவின் ஆற்றல் வள இணைப்பு திட்டத்திற்குள் பங்களாதேஷ், பூட்டான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. (எ-இ)

# ரி.ஆர்.சி. தொடர்பில் சுவிஸ் பயிற்சி

இலங்கையிலுள்ள சுவிற்ஸர் லாந்து தூதரகம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (ரி.ஆர்.சி.) தொடர்பில் சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்குப் பயிற்சி ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.
இலங்கையிலுள்ள சுவிற்ஸர் லாந்து தூதரகம் தெரிவுசெய்யப்பட்ட சிவில் சமூகப்பிரதிநிதிகள் சிலருக்கு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் பயிற்சி வழங்கவுள்ளதாக அறியமுடிகிறது.
வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுடன் நெருங்கிப்பணியாற்றுவோர், வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பில் இயங்கிவருவோர் உள்ளிட்ட 10 பேருக்கு பயிற்சியளிப்பதற்கான அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

# சட்டவிரோதமான பொருள்களை கொள்வனவு செய்வதும் குற்றமே!

## துணைபோகக் கூடாதென தெல்லிப்பழைப்பிரதேசசெயலர்சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 31
இயற்கை வளங்களைச்சட்டவிரோதமாக அபகரிக்கும் முயற்சிக்கு எவரும்துணைபோகக்கூடாது. சட்டவிரோதமானபொருள்களைவிற்பனை செய்வது மட்டுமன்றி அவற்றைக் கொள்வனவு செய்வதும் சட்ட ஏற்பாடுகளின் கீழ் குற்றமாகக் கருதப்படும் என்று தெல்லிப்பழைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.
பிரதேசகட்டடப்பொருள்கள்விற்பனையாளர்கள், மரக்காலைஉரிமையாளர்கள் மற்றும் கல், மண் விற்பனை செய்யும் வியாபார நிறுவனங்களின் உரிமையாளர் களுடன் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
மேலும் அவர் கூறுகையில்;
எமது பிரதேசம் மீள்குடியேற்ற பிரதேசம். விடுவிக்கப்பட்ட பல இடங்களிலிருந்து சட்டவிரோதமான முறையில் பொதுமக்களின் உடைமைகள், இயற்கை வளங்கள் திருட்டுத்தனமாகக் களவாடப்பட்டு அவை விற்பனை நிறுவனங்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.
இவ்வாறான சட்டவிரோத முயற்சிகளை மேற்கொண்ட பலருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இத்தகைய முறையற்ற மோசடிகளுக்குத் துணை போகக் கூடாது.
சட்டவிரோதமான பொருள்களை விற்பனை செய்வது மட்டுமல்ல அவற்றைக்கொள்வனவுசெய்வதும் சட்டஏற்பாடுகளின்கீழ்குற்றமாகக் கருதப்படுகின்றது.
எனவேபொதுமக்கள்தமக்குத்தேவையானஇயற்கைவளங்கள், மரங்கள்மற்றும்தளபாடங்களை கொள்வனவுசெய்யும்போது முறையான விற்பனைச்சிட்டையை உரியகடைகளிடம்பெற்றுகொள்வனவுசெய்ய வேண்டும். வியாபார நிறுவனங்களும் பொதுமக்களும் இந்த விடயத்தில்சட்டத்துக்குட்பட்டுசெயலாற்றவேண்டும்- என்றார். (ச-26)

# டெங்குத் தொற்றால் 37 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 31
இந்த வருடத்தில் டெங்குத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37ஆக அதிகரித்துள்ளது என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. இதுவரை 56 ஆயிரத்து 228 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 27 ஆயிரத்து 883 பேர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.
இதேவேளை - 2022 ஆம் ஆண்டின் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடையும் எனத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் நளின் ஆரியரத்ன தெரிவித்தார். (எ-இ)

# உண்டியலை உடைத்தவர் பொலிஸாரால் கைது

சுதுமலையில் உண்டியல் உடைத்துத் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவரை மானிப்பாய் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.
சுதுமலையிலுள்ள ஆலயத்தின் உண்டியல் நேற்றுமுன்தினம் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டிருந்தது. ஆலய நிர்வாகத்தினர் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.
விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் அரியாலையைச் சேர்ந்த ஒருவரை சந்தேகத்தில் நேற்றுக் கைது செய்துள்ளனர். (அ-ஒ,125)

# உயிர்கொல்லிக்கு அடிமை; கந்தக்காட்டில் மறுவாழ்வுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 31
உயிர்கொல்லி ஹெரோய்னை ஊசி மூலம் பயன்படுத்திய 21 வயதான இளைஞன் நீதிமன்றப் பணிப்புக்கு அமைவாக கந்தக்காடு மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளாரென மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
உயிர்கொல்லி போதைப்பாவனைக்கு இளைஞன் அடிமையானதையடுத்து வீட்டார் பொலிஸாருக்கு முறையிட்டுள்ளனர்.
பொலிஸார் இளைஞனை மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தியபோது உயிர்கொல்லி போதைப்பாவனைக்கு அடிமையானவர் என்பது தெரியவந்துள்ளது. இதனையடுத்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் ஊடாக அவரை கந்தக்காடு மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ,125)

# ஈஸ்டர் தாக்குதலுக்கு முன்னர் தமிழில் பேசிய சஹ்ரான்

கொழும்பு, ஜூலை 31
2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத் தொடர் தற்கொலைத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான், தாக்குதல் நடத்துவதற்கு முன்னர் தமிழில் உரையாற்றியதாகக் கூறப்படும் காணொலியை, கலாநிதி றொஹான் குணரட்ன வெளியிட்டுள்ளார்.
'உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் உள்ளகத் தகவல்கள்' என்ற நூலை தனது இணையத் தளத்தில் வெளியிட்டுள்ள கலாநிதி றொஹான் குணரட்ன, சுமார் 30 நிமிட காணொலியையும் அதனுடன் வெளியிட்டுள்ளார். (அ-ஒ,இ)


## தேவை

நிறுவனமொன்றிற்கு வெல்டர், அலுமினிய பிற்றிங் செய்பவர் மாதாந்தம் அல்லது நாட்கூலி அடிப்படையில் தேவை.

077 277 7779

## விற்பனைக்கு

பாவித்த பனைமரங்கள், தீராந்திகள், தகரங்கள் விற்பனைக்குண்டு.
(பார்வை நேரம் : மாலை 5.00 மணிக்குப்பின்) கைதடி.

077 537 0012

## சாரதி தேவை

அரச நிறுவனத்திற்கு குத்தகைக்கு அமர்த்தப்பட்ட வாகனம் ஓட்டுவதற்கு கனரக வாகன ஓட்டுனர் தேவை

077 722 2130


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர தேசிய பாடசாலையின் 200 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கோலாகலமான நிகழ்வுகள் கடந்த மாதம் 27ஆம் திகதி நடத்தப்பட்டன. யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராசா சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டி ஆரம்பித்துவைத்தார். இதன்னைத் தொடர்ந்து மாணவிகள், பழைய மாணவிகள், அதிபர், ஆசிரியர்களின் துவிச்சக்கர வண்டிப்பவனி, வாகனப்பவனி, நடைபவனி என்பன இடம்பெற்றன. (ய-27)



யாழ். கோப்பாய் மருத்துவமனைக்கு நோயாளர் நலன்புரி சங்கத்தால் ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம-20)



சங்கானை மர்ஸ் கல்வி நிலையத்தில் கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை கணித கல்விக்கண்காட்சி இடம்பெற்றது.
இயக்குநர் இ.பிரதீப் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தரம் 6 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டதோடு அவற்றுக்கான விளக்கங்களும் மாணவர்களால் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டன. (ய-27)



குப்பிழான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரி ஆலயத்தின் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு 1008 சங்காபிஷேகம் கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ய-66)



# உதவி வழங்கல்

சித்திரமேழி பழணியானந்தன் சனசமூக நிலையம் மற்றும் கருகம்பனை இந்து இளைஞர் கழகம் ஆகிய இணைந்து முன்னெடுக்கும் விதையனைத்தும் விருட்சமே செயற்திட்டத்தின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த 45 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்பட்டன.
நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி பா.காந்தரூபன், ஒட்டறுத்தகுளம் கிராம அலுவலர் தவரூபன் சித்திரமேழி பழணியானந்தன், சனசமூக நிலைய தலைவர் மு.நிறஞ்சன், விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்ட குழுவினர், ஊடகவியலாளர் ஜெகதீஸ்வரன், டிசாந் ஆகியோர் கலந்துகொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தனர்.
இதேவேளை புலம்பெயர்ந்து வாழும் பெயர் குறிப்பிட விரும்பாத நபர் ஒருவரினால் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பயனாளிகளுக்கு தலா 6000 பெறுமதியான உலர் உணவு பொருள்களும் வழங்கப்பட்டன. (ய-27)



கோப்பாய் பிரதேச செயலகம் மற்றும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் இணைந்து நடத்திய தொழிற்சந்தை கடந்த 6ஆம் திகதி வியாழக்கிழமை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. மேற்படி தொழிற்சந்தை நிகழ்வில் வேலை தேடும் இளைஞர், யுவதிகள் பலரும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சிக் கூட்டம் தொடர்பில் மக்களைக் குழப்பவேண்டாம்

## எதிரணிகளிடம் ரணில் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 31

சர்வகட்சிக் கூட்டம் தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்து மக்களிடத்தில் குழப்பத்தை ஏற்படுத்தவேண்டாம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிரணிகளிடம் கோரியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டிய சர்வகட்சிக் கூட்டம் ஏமாற்று நடவடிக்கை என்று எதிரணிகள் விமர்சித்து வருவது தொடர்பில் ஜனாதிபதி ரணிலிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'எதிர்க்கட்சிகள்தான் மக்களை ஏமாற்றி அரசியல் பிழைப்பு நடத்தி வருகின்றார்கள். எனக்கு அப்படியான செயல்களில் ஈடுபடவேண்டிய அவசியம் இல்லை. எனினும் ஜே.வி.பி. மற்றும் கஜேந்திரகுமாரின் கட்சி தவிர்ந்த ஏனைய எதிர்க்கட்சிகள் சர்வகட்சி மாநாட்டுக்கு வந்தமை எமது பயணத்தில் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகின்றது. விமர்சனங்களை முன்வைத்து மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தவேண்டாம் என்று எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்' என்றார் ரணில். (அ-ஒ.5.22)

### அமைச்சரவைத்...

மகாவலி 'எல்' வலயத்தினுள் கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள 6 கிராம அலுவலர் பிரிவுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றைப் பிரதேச செயலகத்திடமிருந்து மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இந்த முயற்சி தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் எதிர்ப்பையடுத்து நிறுத்தப்பட்டது. அமைச்சரவையிலும் மேற்படி நடவடிக்கைய்யை இடைநிறுத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கொக்குத்தொடுவாய் அக்கரைவெளியில் 30 ஏக்கர் வீதம் சுமார் ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் மகாவலி அதிகாரசபையால் சிங்களவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகள் 1984ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமானவையாக இருந்துள்ளன.

இந்தக் காணிகளில் உள்ள பற்றைகளை கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் சிங்களவர்கள் துப்புரவு செய்ய முற்பட்டபோதே காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள் தெரியவந்துள்ளன.

இதேவேளை - கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியின் மேலதிக செயலர் தலைமையில் இடம்பெற்ற 'சூம்' கலந்துரையாடலில் மகாவலி அதிகாரசபையின் நடவடிக்கை தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மகாவலி அதிகாரசபையின் தலைமை அலுவலக அதிகாரிகள் அவ்வாறான நடவடிக்கை இடம்பெறவில்லை என்று மறுத்துள்ளனர்.

எதிர்வரும் 3ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்படவுள்ளது. (அ-ஒ.5)

### இது சிங்கள...

வதற்கு உரிமையுண்டு. அதை எவரும் தடுக்க முடியாது - இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

'குருந்தூர் மலையில் புத்தர்சிலை வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விகாராதிபதியிடமும், மறவன்புலவு சச்சிதானந்தத்திடமுமே கேட்கவேண்டும். ஆனால், இலங்கை சிங்கள - பௌத்த நாடு. புத்தர் சிலைகளை எங்கும் வைத்து வழிபடுவதற்கு உரிமையுண்டு. அதை யாராலும் தடுக்க முடியாது' - என்றார். (அ-ஒ.5,22)

### தமிழீழமே...

தமிழீழம் அமைதலே தமிழ் மக்களின் நிரந்தரப் பாதுகாப்புக்கான ஒரே தீர்வு. இலங்கையின் சுபீட்சத்துக்கும் உறுதிப்பாட்டுக்குமான பாதையும் இதுவேதான் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு கறுப்பு ஜூலை நினைவுநாள் பிரிட்டன் பெருநகர மத்தியில் நேற்று எழுச்சியாக நடைபெற்றுள்ளது.

கறுப்பு ஜூலை இனப்படுகொலை நடைபெற்று 40 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இதுவரையில் எந்தவித நீதியும் கிடைக்காதமையால் சர்வதேசத்திடம் நீதி கோரி பிரிட்டன் புலம்பெயர் தமிழர்கள் நேற்று மாலை எழுச்சிப் பேரணியில் ஈடுபட்டனர். மாலை 5 மணியளவில் பிரிட்டன் கொடி மற்றும் தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ-ஒ.இ)

### அரசாங்கத்தின்...

கண்டித்துள்ளனர். கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரத்தில் சர்வதேச தலையீடு கோரி கடந்த வெள்ளியன்று வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டது. அன்றையதினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் என்பது மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகள், அபிவிருத்தி சார் தேவைகளை நிறைவேற்றுவதற்கான ஒன்றேதவிர, அரசியல் கூட்டமல்ல. எனவே அரசியல் காரணங்களுக்காக இதை ஒத்திவைக்குமாறு கோருவதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் தெரிவித்ததாவது:- அவரின் கருத்து கண்டிக்கப்படவேண்டியது. பாதிக்கப்பட்ட தரப்புகளின் கோரிக்கைகளை மதித்து ஒரு நாள் தாமதமாக அந்தக் கூட்டத்தை நடத்துவதால் பெரிதளவில் பாதிப்பை இவர் சந்திக்கப்போவது கிடையாது. மனிதாபிமானமற்ற ஒருவராக அவர் தன்னை நிரூபித்து வருகின்றார். அரசுடன் இணைந்து மனிதவிரோதச் செயலை செய்த[illegible] தொடர்ச்சியாக மனிதவிரோத செயலையே செய்துவருகின்றார் என்று குறிப்பிட்டனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் தெரிவித்ததாவது:- அரசாங்கத்துடன் இணைந்து நிற்கும் ஒரு தரப்பினரே டக்ளஸ் கும்பல். இவர் இனப்படுகொலை செய்த அரசின் ஒரு தரப்பினராகவே இருக்கின்றார். அரசாங்கத்துக்கு சர்வதேசத்தில் நல்ல பெயர் பெற்றுக் கொடுக்கவும் பதவி சுகபோகவாழ்க்கைக்காகவும் தமிழருடைய நலன்களைப் புறக்கணித்தே இவர்கள் காலம் காலமாகச் செயற்பட்டு வருகின்றார்கள். இவர் தொடர்ச்சியாக அங்கம் வகிக்கும் அரசாங்கம்தான் இந்த கொக்குத்தொடுவாய் முதல் காணப்படும் மனிதப்புதைகுழிகளுக்கான காரணகர்த்தாக்கள். இங்கு எந்த அரசியல் விடயங்களும் முன்னெடுக்கப்படவில்லை. மாறாக நீதிகேட்ட ஒரு பயணத்தின் படிநிலைதான் - என்றார்.

கிழக்குப் பல்கலைக்கழக கலை,கலாசார பீட மாணவர் ஒன்றியத்தின் உப தலைவர் கே.றொபின்ஸன், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் அமைச்சர் டக்ளஸின் கருத்தைக் கண்டிக்கின்றோம். தமிழர் உரிமை மீதும், தமிழருக்கு எதிராக அரசாங்கத்தோடு இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்போருக்கும் மிகவிரைவில் பாடம் புகட்டுவோம். துணையாக நிற்காவிட்டாலும் தொல்லையாக நிற்கவேண்டாம். யார் எதிரில் நின்றாலும் தூக்கி எறியப்படுவீர்கள் - என்றார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், அரசுடன் உறவை தொடர்வதற்காக எதையும் செய்யக்கூடியவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. அவரின் கருத்தால் நாம் ஆச்சரியமடையவில்லை. தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகள் இவர்களை போன்ற அரச விசுவாசிகளாலே மழுங்கடிக்கப்பட்டு தொடர்ச்சியாக தமிழர்கள் ஒரு தீர்வைப் பெறமுடியாமைக்குக் காரணமாக அமைந்தது. வெள்ளியன்று நடந்தது பாதிக்கப்பட்ட தரப்புகளின் ஜனநாயகப் போராட்டமே தவிர அரசியல் அல்ல என்று தெரிவித்துள்ளனர். (அ-ஒ.5,125)

### சட்டவிரோத...

இதன்தொடர்ச்சியாக இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சட்டவிரோதமான திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்துக்கு எதிரான கவனவீர்ப்புப் போராட்டம் மீண்டும் திஸ்ஸ விகாரைக்கு அண்மையில் ஆரம்பமாகி நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி வரை தொடர்ச்சியாக நடைபெறவுள்ளதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார். (அ-ஒ.27,66)

### 13ஆவது...

திருத்தம் குறித்து தீர்மானியுங்கள். அதுவரையில் அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசுவதற்கு மக்கள் ஆணை கிடையாது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உயர் பீடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தகவல் அனுப்பியுள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உயர்பீடம் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச தலைமையில் கூடியது. இதன்போது 13ஆவது திருத்தம் குறித்தும் அதிகாரப்பகிர்வு குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி மாநாட்டை கூட்டிப் பேசுவது முறையல்ல என்ற விடயத்தை சிரேஷ்ட உறுப்பினர்கள் எடுத்துரைத்துள்ளனர். கோத்தாபய ராஜபக்ச முன்வைத்த கொள்கைத்திட்டத்தில் 13ஆவது திருத்தம் தொடர்பில் எதுவுமில்லை. அவர் பதவி விலகியுள்ள நிலையில் எஞ்சிய காலத்துக்கே ரணில் ஜனாதிபதியாகியுள்ளார். நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை பெரமுனவிடமே உண்டு. கொள்கைக்கு எதிராகத் தீர்மானிக்க தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இயலாது என்ற விடயத்தை தெளிவாக எடுத்துரைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பஸிலிடம் எடுத்துரைத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் இறுதித் தீர்மானத்தை ஜனாதிபதிக்கும் அஸ்கிரிய மற்றும் மல்வத்து உட்பட ஏனைய உயர் பௌத்த பீடங்களுக்கும் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ.இ)

### உணவுப்...

தெரிவித்துள்ளார். இந்த நிலையில், சாத்தியமான அனைத்துப்பிரதேசங்களிலும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனிடையே, இந்திய அரசாங்கம் அரிசி ஏற்றுமதியை கடந்த வாரம் முதல் நிறுத்தியுள்ளது. இந்த நிலையில், முன்னதாக நாட்டுக்குத் தேவையான அரிசி இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டபோதும், தொடர்ந்து குறித்த வாய்ப்புக்கிடைக்கப் போவதில்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறையை நாட்டு மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறார்கள் என்பதைச் சிந்திக்க முடியாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஒருசில மாவட்டங்கள் தவிர்ந்து ஏனைய பிரதேசங்களில் தண்ணீர்ப் பிரச்சினை இல்லை எனவும், ஒவ்வொரு அங்குல நிலத்திலும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவேண்டும் எனவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர வலியுறுத்தியுள்ளார். (அ-ஒ.இ)

### பொலிஸ்...

இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கு இவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதுடன், கொழும்பில் போக்குவரத்துப் பிரிவில் பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார். வவுனியாவில் பொதுமக்களுக்கு தனது தொலைபேசி இலக்கத்தை வழங்கி அதன் மூலம் பல குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த துரிதமாகச் செயற்பட்டு வந்த நிலையிலேயே அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (அ-ஒ.18)

### ஓமந்தையில்...

நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சாவடைந்துள்ளதுடன் மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தலவாக்கலையைச் சேர்ந்த இராமச்சந்திரன் சதீஸ்குமார் (வயது - 23) என்பவரே சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

சோதனைச் சாவடிக்கு அருகாமையில் நின்றிருந்த உழவியந்திரம் மற்றும் பழுதடைந்து நின்ற கப்ரக வாகனம் ஆகியவற்றுடன் அதேதிசையில் பயணித்த பாரவூர்தி மோதியதில் விபத்து இடம்பெற்றது. விபத்தில் கப்ரக வாகனத்தில் இருந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். (அ-ஒ.100,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற மருந்துப் பாவனை துரிதகதியில் விசாரணை!

## கணக்காய்வாளர் நாயகம் தெரிவிப்பு

**கொழும்பு, ஜுலை 31**

**தரமற்ற மருந்துகளின் பயன்பாடு தொடர்பில் விசாரணை நடத்தி நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிப்பதற்கென 15 பேர் கொண்ட விசேட குழுவை நாடாளுமன்ற பொதுக்கணக்குகள் பற்றிய குழு நியமித்துள்ளது. இந்த விசாரணைகள் தற்போது முழுவீச்சுடன் இடம்பெறுகிறதென கணக்காய்வாளர் நாயகம் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.**

சுகாதார அமைச்சு, மருந்துகள் விநியோகப் பிரிவு, அரச மருந்தகக் கூட்டுத்தாபனம், மருந்துத் தயாரிப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு தேசிய மருத்துவமனை, நாட்டின் ஏனைய பிரதான மருத்துவமனைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் மற்றும் மருத்துவர்கள் ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

விசாரணைகளில் தரமற்ற மற்றும் பதிவுசெய்யப்படாத மருந்துகளின் பாவனை குறித்து பல்வேறு தகவல்கள் வெளிவந்துள்ளன. மருந்துக் கொள்வனவு மற்றும் விநியோகம் என்பனவற்றுடன் தொடர்புடைய கணினிக் கட்டமைப்பு குறித்தும் தற்போது விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கை இன்னும் இரண்டு மாதங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் கணக்காய்வாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# கலைஞர்கள் ஒன்றுகூடல்

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் கலைஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு பிரதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. 'காலப்பிழையோ வன்றிக் கடவுள் தரும் சோதனையோ சாலப் பொருந்திவந்து சாவெமக்குத் தருகிறாயே' எனும் விடயப்பொருளில் கவிஞர் இ.த.ஜெயசீலன் தலைமையில் கவியரங்கமும் இடம்பெறவுள்ளது. (ச-ரி)

# விபத்தில் சிறுவன் உயிரிழப்பு: பவுஸருக்குத் தீ வைத்த மக்கள்

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரிதிதென்னைப் பகுதியில் தண்ணீர் பவுஸர் மோதி 6 வயதுச் சிறுவன் உயிரிழந்ததையடுத்து ஆத்திரமடைந்த பிரதேச மக்கள் அந்தப் பவுஸருக்குத் தீவைத்தனர். அதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது. ரிதிதென்ன இக்ரஹ் வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்றுவரும் சலீம் ருஸ்திக் என்ற சிறுவனே இந்த விபத்தில் உயிரிழந்தார். சைக்கிளில் மாலைநேர வகுப்புக்குத் தனது சகோதரனுடன் சென்ற குறித்த சிறுவன், தண்ணீர் ஏற்றி வந்த பவுஸர் பின்நோக்கிச் சென்றபோது அதனுள் அகப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மதுபோதையில் இருந்த பவுஸரின் சாரதியும், உதவியாளரும் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்ற நிலையில், பிரதேச மக்கள் அவர்களைத் துரத்திப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (எ-22)

# முத்துராஜா நிலைமைக்கு காரணம் நாங்களல்ல!

*வனஜீவராசிகள் திணைக்களம் கைவிரிப்பு*

தாய்லாந்து அரசால் நன்கொடையாக இலங்கைக்கு வழங்கப்பட்ட முத்துராஜா யானை விகாரையொன்றின் தனிப்பட்ட பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டமையாலேயே நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. அதற்கு எம்மால் பொறுப்புக்கூற முடியாது என மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவை சுட்டிக்காட்டியுள்ளன. நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற முத்துராஜாவை தாய்லாந்துக்குக் கொண்டுசென்றமையால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்பட்ட அதிருப்தி தொடர்பில் சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் அண்மையில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த யானை மீண்டும் தாய்லாந்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது நிபந்தனைகளுடனா? மற்றும் கொண்டுசெல்லப்பட்டமைக்கான காரணங்கள் என்னவென குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும வினவினார். முத்துராஜா யானை அரச பட்டயம் ஒன்றின் மூலம் அளுத்கம கந்தே விகாரைக்குத் தனிப்பட்ட பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ளது. தனியார் சொத்தாகக் கருதப்பட்டதால் மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டிலிருந்து விலகியுள்ளது. யானையைப் பராமரிப்பதில் ஏற்பட்ட குறைபாடுகளாலேயே யானையின் உடல்நிலை மோசமடைந்தது என அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

தாய்லாந்தில் யானைக்கு சிகிச்சை அளிக்கும் வசதிகள் எமது நாட்டைவிட அதிகம் என்பதால், யானை குணமடைந்த பின்னர் மீண்டும் ஒப்படைக்கப்படும் என உறுதியளித்தே, தாய்லாந்து அரசால் கொண்டுசெல்லப்பட்டது. ஆனால், தற்போது முத்துராஜா யானையை இலங்கைக்குத் திருப்பி அனுப்பமாட்டோம் என்று தாய்லாந்து கூறியுள்ளதால் இது இலங்கைக்கு சர்வதேச அளவில் அவமானத்தை ஏற்படுத்தியது.

அதற்கான பொறுப்பு மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு இல்லை என வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாளர் தெரிவித்தார். (ச-இ)



# ஜப்பானின் நிதியுதவியில் யூரியா உரம் நன்கொடை

கொழும்பு, ஜுலை 31

வடக்கு- கிழக்கு மாகாணங்கள் மற்றும் குருநாகல் மாவட்ட விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்க இலங்கைக்கு உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு 8 ஆயிரத்து 300 மெற்றிக் தொன் யூரியாவை நன்கொடையாக வழங்கத் தீர்மானித்துள்ளது. இதற்கு ஜப்பான் அரசாங்கம் நிதியுதவி வழங்குகின்றது. பெரும்போகத்தில் ஒரு ஹெக்ரேயருக்குக் குறைவாக நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு இந்த உரம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இதேவேளை - உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஒருங்கிணைப்பு மூலம் இதுவரை 15ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா இலங்கைக்குப் பல சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

**வேலையாள்கள் தேவை**

யாழில் பிரபலமாக இயங்கும் **புடவை நிலையம்** ஒன்றிற்கு **விற்பனை பிரதிநிதிகள் பெண்கள்** தேவை. வயது 21 - 30 வரை தகுந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

**245, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**071 415 0995**

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கிவரும் உணவகமொன்றிற்கு அப்பம், ரொட்டி வேலை, சிற்றுண்டி வகைகள், மதிய, இரவு போசனம் போன்ற வேலைகள் தெரிந்த வேலையாட்கள் தேவை.
(முழுநேரம், தங்குமிட வசதி உண்டு)

**077 567 0041**

**மணமகள் தேவை**

01. கந்தர்மடம் - மானிப்பாய், இந்து கௌரவகுலம் (V) உத்தராடம், 1989, Masters of Science in Biochemistry MSc.(Canada) கனடா Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34257

02. உடுப்பிட்டி - கரணவாய், இந்து கௌரவகுலம் (V) அவிட்டம், 1990, BSc Engineering (Newzealand), Newzealand Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34184

03. மாவிட்டபுரம் - இந்து கௌரவகுலம் (V) விசாகம், 1984, Electrical Engineer Singapore Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33732

04. சுருவில் - வண்ணார்பண்ணை, இந்து கௌரவகுலம் (V) அச்சுவினி, 1987, BSc (Moratuwa), MSc (Australia), Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33541

05. திருநெல்வேலி - இந்து கௌரவகுலம் (V) ரேவதி, 1985, Network Administration, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33507

06. கொடிகாமம் - Jaffna Town, இந்து கௌரவகுலம் (V) ஆயிலியம், 1980, Lowyer, Australia Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32385

07. மானிப்பாய் - இந்து கௌரவகுலம் (V) உத்தரம், 1974, Business Management (UK), Uk Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32102

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.